பெரம்பலூர் மாவட்டம்,குரும்பலூர் பேரூரில் புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலையை பேரூர் செயலாளர் எம்.வெங்கடேசன் தலைமையில் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி. திறந்து வைத்து சிறப்புரையாற்றினர். இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன்.எம்.எல்.ஏ., பா.துரைசாமி, குன்னம் சி.ராஜேந்திரன், இரா.ப.பரமேஷ்குமார், தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், செ.ரவிச்சந்திரன், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

163 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.19.08 கோடியில் வங்கிக்கடன்

அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன் வழங்கினார்

நீலகிரி, மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள், முன்னிலையில், சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற உலக மகளிர் தின விழா 2025ல் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள், அவ்வையார் விருது, பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது வழங்கியததை தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் (08.03.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் துவக்கி வைத்தார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு, கேக் வெட்டி, 163 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.19.08 கோடி மதிப்பிட்டில் வங்கி கடன் உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் ஊரகப்பகுதிகளில் 85 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.10.04 கோடி மதிப்பிலும், நகர்புற பகுதிகளில் 47 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.5.38 கோடி மதிப்பிலும், பேரூராட்சி பகுதிகளில் 31 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.3.66 கோடி என மொத்தம் 163 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.19.08 கோடி மதிப்பில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கி கிளைகளின் மூலம், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் விவசாயம், தேயிலை மற்றும் காபி தோட்டங்களை குத்தகைக்கு எடுத்தல், மண் பாண்டம் தயாரித்தல், நீலகிரி தைலம் தயாரித்தல், தேன் எடுத்தல், தேங்காய் எண்ணெய் தயாரித்தல், தையல் மற்றும் எம்பிராய்டரி தொழில் போன்ற பல்வேறு வாழ்வாதார தொழில் மேம்பாட்டிற்காக வங்கி கடன் இணைப்புகளை வழங்கினார்.

மேலும், அரசு தலைமை கொறடா அவர்கள், 2022 2023ம் ஆண்டில் மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்டமைக்காக தேர்வு செய்யப்பட்ட முதுமலை

(பொது) கிராம வறுமை ஒழிப்பு சங்கம், தேனாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, தேவாலா பகுதி அளவிலான கூட்டமைப்பு, ஊரகப்பகுதிகளில் செயல்படும் ஜெயம் மகளிர் சுய உதவிக்குழு, ஜான்சிராணி மகளிர் சுய உதவிக்குழு, காவ்யா மகளிர் சுய உதவிக்குழு மற்றும் நகர்புறப் பகுதிகளில் செயல்படும் மகிளம் பூ மகளிர் சுய உதவிக்குழு, இனிய சங்கம் மகளிர் சுய உதவிக் குழு, பாரதி மகளிர் சுய உதவிக்குழு ஆகிய 9 சுய உதவிக் குழுக்களுக்கு மணிமேகலை விருதுக்கான கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, பாராட்டினார்.

மேலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 37 நபர்களுக்கு நுண்நிதி தொழில் கடனாக ரூ.23 இலட்சம் மற்றும் இணை மான்ய திட்ட நிதியாக 3 நபர்களுக்கு ரூ.5.32 இலட்சம் என மொத்தம் 40 பயனாளிகளுக்கு ரூ.28.32 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார். முன்னதாக, அரசு தலைமை கொறடா, மகளிர் திட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளையும், மகளிர் தினத்தை முன்னிட்டு, போடப்பட்டிருந்த கோலங்களையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா அவர்கள் தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உலக மகளிர் தினத்தை சுய முன்னிட்டு, இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் உதவிக்குழுக்களுக்கு பல்வேறு வங்கி கடன் இணைப்புகளை வழங்கியதை தொடர்ந்து, நமது மாவட்டத்திலும் சுமார் 163 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.19.08 கோடிமதிப்பில் வங்கி கடன் இணைப்புகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் முன்னேற வேண்டும் என்பதற்காக அதிக முக்கியத்துவம் வழங்கி, அதிகபடியான திட்டங்களை அறிவித்து, மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அனைத்து துறைகளிலும் தமிழகம் முதல்நிலை அடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு ஆக்கப்பூர்வமாக நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அரசின் திட்டங்களுக்கு அனைவரும் முழு ஆதரவு தர வேண்டும். மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெறப்படும் கடனுதவிகளை நமது மாவட்டத்தில் சரியான முறையில் திரும்பி செலுத்தி வருகிறார். இதற்கான எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாவட்டத்தில் சுமார் 6,000 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 1.5 இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2030ம் ஆண்டில் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் உயர வேண்டும் என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அதேபோல் அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்பட்டு கொண்டு வருகிறது. நான் முதல்வன் திட்டம், விடியல் பயணம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நமது அரசால் அனைவரும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு மற்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும், அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என அரசு தலைமை கொறடா அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மகளிர் திட்ட இயக்குநர்காசிநாதன், உதகை நகர்மன்றத் தலைவர் மதி.வாணீஷ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்த் கல்கி, வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலர் வசந்த், உதவி திட்ட அலுவலர்கள் (மகளிர் திட்டம்) திருமதி. ஜெயராணி, சாந்தசீலன், / ரமேஷ், சரவணபாண்டியன், ரவி, அருண்குமார், நீலகிரி மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர் வெற்றி வேலன், திருமதி.வனிதா (6வது வார்டு உறுப்பினர்) உட்படபலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, காந்திபுரம் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி அருகில் உள்ள சிக்னலில் , இருமுனை தகவல் தொடர்பு சகோ திட்டத்தை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி துவக்கி வைத்தார்.உடன், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் மாநகர காவல் ஆணையாளர் .சரவண சுந்தர் மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக் தொண்டாமுத்தூர் ரவி மேயர் கா.ரங்கநாயகி , மாநகராட்சி ஆணையாளர் .மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் .ரா.வெற்றிச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், முன்னாள் எம்பி நாகராஜ் , பணிகள் குழு தலைவர் சாந்திமுருகன், தி.மு.க. பகுதிக்கழக செயலாளர்கள் மா.நாகராஜ், ப.பசுபதி,சரத், வட்டக்கழக செயலாளர்கள் சசிக்குமார் , ஜெபமாலைதாஸ், ஆனந்தன் மற்றும் பலர் உள்ளனர்.

கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பேராசிரியரின் திருவுருவ படத்திற்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி தலைமையில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தலைமைச்செயற்குழுஉறுப்பினர்செ.இராமலிங்கம், மாநகரச்செயலாளர்சு.ப.தமிழழகன், ஒன்றியச்செயலாளர்கள்கோ.க.அண்ணாதுரை, சு.க.முத்துசெல்வம், மாநகர கழகநிர்வாகிகள் எஸ்.வாசுதேவன், ப்ரியம்ஜெ.சசிதரன், எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம், வெள்ளகோவிலில் இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் வரவேற்புரையில் நகர செயலாளர் சபரி எஸ்.முருகானந்தன், ஒன்றிய செயலாளர் கே.சந்திரசேகரன்ஆகியோர்முன்னிலையில்நடைபெற்றது. இக்கூட்டத்தில்அமைச்சர், மாவட்டப்பொறுப்பாளர்மு.பெ.சாமிநாதன் கண்டன உரையாற்றினார். இதில் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், கே.இ.பிரகாஷ், எம்.பி., இந்திரகுமார் தேரடி, திருமேனி, நா.தமிழ்ச் செல்வன், ராசி கே.ஆர்.முத்துக்குமார் உள்ளட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நெம்மேலியில் இன்று (10–ஆம் தேதி) காலை – காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பில்

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடல்!

தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்குகிறார்!

சென்னை, மார்ச் 10– மாமல்லபுரம் அருகே நெம்மேலியில் இன்று 10–ஆம் தேதி காலை நடைபெறும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார். சட்டமன்றத் தேர்தலில் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று ஆய்வுப் பணிகளை மேற்கொள்கிறார்.

அந்த வகையில் இன்று 10-ஆம் தேதி. நாளை 11-ஆம் தேதி ஆகிய 2 நாட்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

இன்று 10-ஆம் தேதி காலை 10 மணியளவில் சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரை இ.சி.ஆர். சாலை பூஞ்சேரி வழியாக பையனூர் சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ள கோத்ரேஜ் தொழிற்சாலையை திறந்து வைக்கிறார்.

அதன் பின்பு மீண்டும் பூஞ்சேரி இ.சி.ஆர். சாலை வழியாக மாமல்லபுரம் அருகே உள்ள நெம்மேலியை வந்தடைகிறார். நெம்மேலியில் உள்ள லலிதா திருமண மண்டபத்தில் இன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும் "காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் சந்திப்பு" மாபெரும் நிகழ்ச்சியில் பங்கேற்று கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார்.

மாவட்ட - மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், மாநகர வட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் பங்கேற்கும் கழக நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டறிந்த பின்பு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 2026-ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி என்ற இலக்கை அடைவதற்கான ஆலோசனைகளை கழக நிர்வாகிகளுக்கு வழங்குகிறார்.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னின்று செய்து வருகின்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில், அரசு ராசா மிராசுதார் மருத்துவமனையில் நடைபெற்ற சிறப்பு ரத்ததான முகாமை மத்திய மாவட்ட செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தொடங்கிவைத்தார். இதில் மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, மேத்தா, நீலகண்டன், டாக்டர் வசந்தகுமார், டாக்டர் ராஜமோகன், விக்னேஷ், சுரேஷ், சத்யநாராயணன், வெங்கடேஷ், பாலதண்டாயுதம், டாக்டர் சங்கீதா, விஜயகுமார், திலீப்குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.